23.03.2026

I.A.No. 23/2026 in O.S.No.196/2012 மனு அனுமதிக்கப்பட்டு வா.சா.1 ரேச்சல் ஜோயல் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. வா.சா.ஆ.20, 21, 22 ஆவணங்களில் நான் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ஆவணத்தில் அசல் வழக்கு எண்.84/ 2013ல் பிரதிவாதிகள் இந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்தது 2012ம் வருடம் என்றால் சரிதான். வா.சா.ஆ.20ல் வழக்கு எண்.39/2012 என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு எண்.39/2012 தாக்கல் செய்த பிறகுதான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்யும்போது அசல் வழக்கு எண்.39/2012 ஜான்நேசன் தாக்கல் செய்த வழக்கை பற்றி தெரியும் என்றால் சரிதான்.

2. எனது வழக்குரையில் மேற்சொன்ன வழக்கை பற்றி இதே பிரதிவாதிக்களுக்கு எதிராக நடந்த விவரத்தை எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.21 ஆவணத்தில் அசல் வழக்கு எண்.119/2013 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தில் இதே

தாவாசொத்திற்கு மேற்சொன்ன வழக்கின் வாதிக்கு உரிமை மூலம் இல்லை என்று தள்ளுபடி செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.20 மற்றும் 21 ஆவணத்தில் உள்ள வழக்கிற்கு எதிராக பிரதிவாதகிள் மேல்முறையீடு மதுராந்தகம், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான்.

3. மேற்சொன்ன ஆவணம் வா.சா.ஆ.20 முதல் 22 வரையிலான ஆவணங்களில் வழங்கப்பட்ட தீரப்பு மேல்முறையீட்டு தீரப்பிற்கு கட்டுபட்டது என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ.20 முதல் 22 வரையிலான ஆவணங்களை வைத்து இவ்வழக்கில் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.